REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம். ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 6உ திங்கள் (22—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 7உ செவ்வாய் (23—8—55) [இதழ் 59

ஹரியாணுவில் 1,200 பேர் பட்டினிப் போர்

"பஞ்சாப் மொழிவழி மாநிலம் சேருவதை கூடாது; அவை தனித்தவரிடம் சர்க்கார் உறுதியுடன் நடந்துகொள்ளவில்லை; அவர்களைப் பற்றிய சர்க்காரின் கொள்கை பலவீனமாயுள்ளது; இதனை நாங்கள் எதிர்க்கிறோம்,"

—என்று கூறி, பஞ்சாப் முன்னணித் தலைவரான டாக்டர் லாலி சரன் ஷர்மா என்பவரும், இன்னும் சிலரும் பட்டினிப் போர் துவக்கியுள்ளனராம்.

அவருடைய சீடர்களில் 200 பேர்களும், இன்னும் ஹரியாணு நகரவாசிகளில் சுமார் 1000 பேர்களும் அந்தப் பட்டினிப் போரில் கலந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

'தன்னாட்சி நிறுவ காமராசர் தயாரா?'

'டில்லியின் தொடர்பைத் துண்டிப்பதானல் தேர்தலில் நிற்க முனையமாட்டோம்'

புளியங்குடியில் அண்ணா போர் முழக்கம்

"அமைச்சர் பதவிக்கு ஆசையோ, அல்லது நாட்டை ஆள வேண்டுமென்ற வேட்கையோ கொண்டவர்களல்ல நாங்கள்; 50 ஆண்டுகள் சென்றாலும்கூடத் தேர்தலில் நிற்க நாங்கள் முனைய மாட்டோம்—ஆட்சிப் பொறுப்பைக் காமராசரே நடத்தட்டும்; ஆனால், வட நாட்டுத் தொடர்பைத் துண்டித்துவிட்டுத் திராவிடம் தனியாக அமைய—தனக்கென ஒரு தன்னாட்சி நிறுவ காமராசர் ஒத்துழைக்க முன்வருவாரா? அப்படி அவர் ஒத்துழைப்பு தர முன்வருவாரானல், 'தேர்தலில் நிற்க மாட்டோம்' என்று கையெழுத்திட்டுத் தர நாங்கள் தயாராகவே இருக்கிறோம்;

"திராவிட நாடு தனியாகப் பிரிந்தால் உழுபவனுக்கே நிலம் சொந்த உடைமையாக்கப்படும்; ஆலைகளிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும்; அதே நேரத்தில் சக்திக்கேற்ற உழைப்பைத்தான் அவர்கள் தருவர்; திராவிட நாடு திராவிடருக்கானல், சாதிப் பாகுபாடுகள் இருக்காது; பெண் அடிமை, வருணாச்சிரமக் கோட்பாடுகள் அனைத்தும் மாய்ந்தொழியும்; வெளி நாடுகளில் வாழும் திராவிட இன மக்களுக்கு—அவர்கள் வாழ்வதற்கான வழி வகைகள் செய்து கொடுக்கப்படும்: இங்கே—திராவிட நாட்டில் சமதர்மக் கூட்டாட்சி நடைபெறும்."

—இவ்வாறு, 17—8—55-ல், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த புளியங்குடியில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் பேசிய அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில், இன்றைய இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டமும், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 6,000 கோடியும், சென்னை மாநில சர்க்கார் கோரும் ரூ. 200 கோடி திட்டத்தையும், டில்லியின் ஓரவஞ்சனையையும், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தினல் வட நாடு வளம் பெறவும், தென்னாடு தேய்வு பெறவுமான நிலை ஏற்பட்டதையும் விளக்கினர்.

* * *

17—8—55 மாலை 5½ மணியளவில், குற்றாலம் வழியாகச் சென்று கொண்டிருந்த அண்ணா அவர்களை புளியம்பட்டி தி. மு. கழகத் தோழர்களும், மற்றும் 1,000 பேருக்கு மேற்பட்ட பொதுமக்களும் ஊர் எல்லையில் வரவேற்றனர்.

பின்னர், அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்குத் தோழர் பி. ஏ. செங்காதரன் தலைமை தாங்கினர்.

தோழர்கள் கே. வி. கே. சாமி, அ. பொன்னம்பலனர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொதுக் கூட்டத்தின்போது, அண்ணா அவர்கள் பேச எழுந்ததும், பொது மக்கள் அனைவரும் ஏகோபித்து 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய முழக்கத்தை விண்ணதிர எழுப்பினது மிகுந்த ஆரவாரத்தை உண்டுபண்ணிற்று. பொதுக் கூட்டத்தில் சுமார் 25,000-த்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத் தகுந்ததாகும்.

செக்கிழுத்த சிதம்பரத்தின் பெயரால் வடநாட்டில் ஒரு மருத்துவமனை உண்டா?

உண்மை காங்கிரஸ்காரர்கள் சிந்தனைக்கு அண்ணாவின் கேள்வி

முக்கூடல், ஆக. 18—

"செக்கிழுத்த சிதம்பரனர், கொடிக்காக உயிர் நீத்த திருப்பூர் குமரன்—இவர்கள் பெயரால் வட நாட்டில் ஒரு மருத்துவமனைகூட இல்லாமல் இருக்கும்போது, வட நாட்டவர் பெயரை மட்டும் இங்கு—தென்னாட்டில் நாம் வைத்துக்கொண்டு வட நாட்டவருக்கு ஏன் அடிமையாக வேண்டும்?

"திராவிட நாட்டில், நாம் தனியாகப் பிரிந்து வாழ சகல வசதிகளும் அமைந்திருக்கும்போது, ஏன் நமது பிடியை வட நாட்டவரிடம் ஒப்படைத்து, சேர்ந்து வாழ வேண்டும்? இந்த விளக்கத்தை உண்மைக் காங்கிரஸ் தோழர்கள் நன்கு உணர வேண்டும்."

—இவ்வாறு, அண்ணா அவர்கள் 18—8—55-ல், முக்கூடலில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

18—8—55 இரவு 9 மணியளவில், பாண்டியனர் திடலில் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில், முக்கூடல் தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில், தோழர்கள் கே. வி. கே. சாமி, அ. பொன்னம்பலனர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா அவர்களுக்கு முக்கூடல் தி. மு. கழகச் சார்பில், தோழர் மா. சு. முத்துக்குட்டி வரவேற்பு இதழ் வாசித்தளித்ததுடன், அனைவருக்கும் கைத்தறித் துண்டுகளும் அணிவித்தார்.

தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள், நமது நாட்டில் பலவிதக் கடவுள்கள் இருப்பதால் என்னென்ன விதமான கஷ்டங்கள் ஏற்பட்டு, மக்கள் இழி நிலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள் என்பதை விளக்கிப் பேசினர்.

கோவில்பட்டியில் அண்ணா

மகத்தான வரவேற்பு — மாபெரும் பொதுக்கூட்டம்

16—8—55-ல், அண்ணா அவர்கள் கோவில்பட்டி வருகையையொட்டி நகரெங்கும் கொடிகளாலும், வரவேற்பு தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை 10 மணியிலிருந்தே, அண்ணா அவர்களின் வருகையை எதிர்நோக்கி இலட்சுமி மில்லிலிருந்து வழி நெடுக பாதையின் இருமருங்கிலும் தோழர்கள் காத்திருந்தனர்.

மாலை 5 மணியளவில், அண்ணா, பொன்னம்பலனர், இராசகோபால், கே.வி.கே சாமி ஆகியோர் காரில் வரவே, வாழ்த்தொலிகள் வானைப் பிளக்க, கூடியிருந்த மக்கட் கூட்டம் அண்ணாவையும், ஏனையோரையும் வரவேற்றது.

அண்ணா ஆகியோர் தங்குமிடமாகிய கலைமணி இல்லத்திற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியப் பிரதமர் மேற்கொண்ட ஒப்பந்தம் பலன் தரும் இலட்சணம்

புள்ளிவிவரங்கள் வெளியிடும் சோகச் செய்தி

இலங்கையில் உள்ள சுமார் 8 இலட்சம் 'இந்தியர்'கள், இலங்கைக் குடி உரிமை கோரி மனுச் செய்திருந்தனர்; ஆனல், இவர்களில், கடந்த 1955 ஜூலைத் திங்கள் முடிய 97,000 பேர் மட்டுமே இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற புள்ளிவிவரங்கள் கிடைத்திருக்கின்றன.

கடந்த 1955 ஜனவரி முதல் மே திங்கள் முடிவுவரை 146 பேர்கள் மட்டுமே குடிஉரிமை வழங்கப்பட்டிருக்கின்றனர்; அதே காலத்தில் 11,916 பேர்களுக்கு குடிஉரிமை மறுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

இன்னும் முடிவு தெரிவிக்கப்படாது உள்ள மனுக்களை, கடந்த அக்டோபர் ஒப்பந்தப்படி, வரும்

(4-ம் பக்கம் பார்க்க.)

'ஆவடி மாநாட்டிற்குப் பிறகு!'

'நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டுகள் காங்கிரசில் சேர்ந்துள்ளனர்'

ஐதராபாத் காங்கிரஸ் தலைவர் தகவல்

ஐதராபாத், ஆக. 20—

கோவர்தன், ராமாச்சரன் என்ற இரு நகரசபை உறுப்பினர்கள் உட்பட பத்து பிரபல கம்யூனிஸ்டுகள், காங்கிரசில் சேர்ந்துவிட்டனராம்.

ஜே. வி. நரசிங்கராவ் என்ற ஐதராபாத் பிரதேச காங்கிரஸ் தலைவர், ஆவடி மாநாட்டிற்குப் பிறகு, ஒரு காலத்தில் கம்யூனிஸ்டு கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்த நூற்றுக்கணக்கானேர், இப்போது காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிகள் கம்யூனிஸ்டுகளின் கோட்டை என்று கருதப்படும் கம்மான் மாவட்டத்தில் நடைபெற்றுள்ளனவாம்.

கம்மான் மாவட்டத்தில் எல்லா சட்டசபை, மக்கள்சபைத் தொகுதிகளிலும் கடந்த பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளே வெற்றி பெற்றனர் என்று கூறப்படுகிறது.

'உண்மையான பிரச்சினைகளை அரசியலால் தீர்க்க முடியாது'

ம. சோ. கட்சித் தலைமையை ஏற்க மறுத்து ஜெயப்பிரகாஷ் விளக்கம்

புதுடில்லி, ஆக. 21—

"கட்சிப் பற்றற்ற வகையில் ஜனநாயகம் வளரவேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது;

"அரசியல் கட்சிகள் இயங்க வேண்டுவது அவசியம்தான்; ஆனல், சமுதாயத்தின் உண்மையான பிரச்சினைகளை அரசியல் மூலம் தீர்க்க முடியுமென்பதில் எனக்கு இனி நம்பிக்கை இல்லை,'

என்று ஜெயப்பிரகாஷ் நாராயண், தான் திரும்பவும் ம. சோ. கட்சியின் தலைமையை ஏற்பதற்கில்லை என்று தமிழ்நாடு ம. சோ. கட்சித் தலைவர் சின்னதுரைக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பஞ்சம், பட்டினிக்கு தினம் நூற்றுக்கணக்கானேர் பலி!

உயிர் பிழைக்க புல் பூண்டு மட்டுமின்றி மிருகங்களையும் தின்கின்றனராம்!

ஹெய்டி குடியரசுத் தீவில் கோர நிலை

கிங்ஸ்டன் (ஜமைக்கா), ஆக. 21—

மேற்கிந்தியத் தீவுகளிலுள்ளதும், 10,714 சதுர மைல்கள் பரப்பளவுள்ளதும், சுமார் 30 லட்சம் மக்கள் வசிப்பதுமான ஒரு குடியரசுத் தீவுதான் ஹெய்டி என்பது!

கடந்த அக்டோபரில் இந்தத் தீவில் கடுமையான சூறாவளி வீசி, பயிர்களை எல்லாம் அழித்து விட்டது; அழித்தது போக, மிஞ்சியிருந்தவைகளையும், மே—ஜூன் மாதங்களில் கடும் மழை பெய்து நாசம் செய்துவிட்டது; இதனல், இத்தீவில் கோரமான பஞ்சம் தலைதூக்க ஆரம்பித்தது.

40,000 முதல் 70,000 பேர் வரை பட்டினியால் வாடிக்கொண்டிருக்கின்றனராம்; தினந்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் மடிந்துகொண்டிருக்கின்றனராம்!

உயிர் பிழைக்க, மக்கள், பூண்டுகள் மட்டுமின்றி, குதிரைகளையும், கழுதைகளையும் கொன்று தின்று வருகின்றனராம்.

ஆண்டொன்றுக்கு 15 சதவிகிதம் 1950-லிருந்து 1957-ம் ஆண்டு வரையுள்ள 7 ஆண்டு காலத்திற்கு போனஸ், முதலாளிகளுக்கும்—தொழிற்சங்கத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி உஜ்ஜெயின் மில் தொழிலாளருக்குக் கொடுக்கப்படுமாம்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—8—'55 திங்கள்

பதவி பறிக்கப்பட்டதால்!

(2)

"நீங்கள் ஒரு உயர்ந்த அரசாங்கத்தைப் பெற்றிருக்கிறீர்கள்; உங்கள் நாட்டுப் பகுதியிலேயே நீங்கள் இருந்திருப்பீர்களானல், இது போன்ற உயர்ந்த ஒரு அரசாங்கத்தைப் பெற்றிருக்க மாட்டீர்கள்;

"இவ்வாறு கூறுவது அறிவுடைமைதானு என நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்; 'இக் கருத்து பிரசுரிக்கப்படமாட்டாதா? அதனல் சிலருக்கு அதிருப்தி ஏற்படாதா?'—என நீங்கள் வினவக்கூடும்.

"இக்கருத்தை செய்தித் தாள்கள் பிரசுரிக்கத்தான் செய்யும்; அவைகள் பிரசுரிக்கட்டும்; நான் கூறினது உலகில்சாதாரணமாகவும்,பொதுவாகவும் நிகழும் சம்பவங்களேயாகும். தனி நபர்களுக்கு எழுச்சியும் விழ்ச்சியும் உண்டு. அதுபோன்றே ஒரு அரசாங்கத்திற்கும் நன்மை—தீமை காலங்களும் உண்டு."

சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், மேற்கண்டவாறு கனம் காமராசர் ஆட்சியை பம்பாயில் இழித்துப் பழித்துக் கூறி இருக்கிருர்.

கனம் காமராசரின் ஆட்சி, பிறரின் பழிப்புக்கு ஆளாக முடியாத சிறந்த ஆட்சி என்பதால் அல்ல, நாம் ஆச்சாரியாரின் குற்றச்சாட்டை எடுத்துக்காட்டுவதற்குள்ள காரணம். ஆச்சாரியாரின் இழிகுணம் — காட்டிக்கொடுக்கும் இயல்பு எந்த வேகத்தில் செயல்படுகிறது என்பதையும், முதல் அமைச்சர் பதவி அவரிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டதால் ஆச்சாரியாருக்குள்ள ஏமாற்றத்தையும் எரிச்சலையும் எடுத்துக்காட்டுவதற்கே, அவருடைய மேற்கண்ட குற்றச்சாட்டை எடுத்துக்காட்டியுள்ளோம்.

மாதுங்கா தமிழ் மக்கள் தமக்களித்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துக்கொண்ட வேளையிலேயே, அன்பர் ஆச்சாரியார் மேற்கண்ட நஞ்சைக் கக்கியுள்ளார்.

மாதுங்கா தமிழர்கள் ஆச்சாரியாரைப் பாராட்டுகிருர்கள்—அதுவும், முகத்துக்கு நேராக!

அத்தகு நேரத்தில், பிறரின் பாராட்டுதலுக்கும், புகழுரைக்கும் ஆளாகிறவர்கள், அவர்கள் எத்தகைய எரிவுள்ளம் இயல்பாகவே வாய்க்கப்பட்டவர்களாக இருந்தபோதிலும் கூட, அந்த நேரம் வரையிலாவது, அந்த எரிவுள்ளம் தணியப்பெற்றவர்களாக இருப்பர். அவர்களுடைய சுபாவம் மறைந்து மனமகிழ்வுடன் காணப்படுவர். எவ்வளவு நெஞ்சழுத்தக்காரர்களாக இருந்தபோதிலும்கூட, பிறர் தமமைப் புகழ்ந்ததால் ஏற்பட்டுள்ள பூரிப்பை மற்றவர் சுலபமாக அறிந்து கொள்ளும் வண்ணம் காட்டமட்டார்களேயல்லாது, ஏற்படும் பூரிப்பை தம் இதயத்தில் நுழையவிடாது தடுத்துவிட முடியாது. இதயத்தைக் களிப்பு கப்பிக்கொண்டுள்ள காலத்தில், அவர்களுடைய வாய் எரிவை கக்காது; அது முடியவும் முடியாது.

ஆனல் ஆச்சாரியாரோ நெஞ்சழுத்தக்காரரிலும் நெஞ்சழுத்தக்காரராக இருக்கிருர். அவரே ஒரு முறை தன்னைக் குறித்து 'கல் நெஞ்சன்' எனக் கூறிக்கொண்டது முழுதும் உண்மையானது என்றே கொள்ளவேண்டி இருக்கிறது.

'சென்னை அரசாங்கம் உயர்ந்ததா? பம்பாய் அரசாங்கம் உயர்ந்ததா? இரண்டையும் ஒப்பவைத்து ஆராய்ந்து முடிவு கூறும்' எனக் கேட்டுக்கொள்ளவில்லை ஆச்சாரியாரை, மாதுங்கா வாழ் தமிழர்கள்!

தென்னிந்தியர் ஒருவர் வந்திருக்கிருரே, அதிலும் முதுகிழவராயிற்றே என்ற உயர்ந்த எண்ணத்தில், வட்டாரப் பற்றின் மிகுதியால், மாதுங்காவில் உள்ள தமிழர்கள் அன்பர் ஆச்சாரியாரை வாழ்த்தி வரவேற்று இருக்கிருர்கள். மாதுங்கா தமிழர்களுக்கிருந்த அந்த அருங்குணத்தில் அணுவளவும் மூப்படைந்த ஆச்சாரியாரிடம் இருந்திடக் காணேம். 'மறந்தால் அல்லவா மீண்டும் நினைப்பதற்கு?' எனும் அருங்கருத்து குறளில் திகழ்கிறது. அக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில், தன்னைப் பதவியிலிருந்து துரத்தியடித்த கனம் காமராசரை மறக்காத தீ உள்ளம் படைத்தவராக ஆச்சாரியார் இருக்கிருர். அத்தீ உள்ளம், ஆச்சாரியாரைப் பழிவாங்கத் தூண்டுகிறது! அதன் வழி பேயாட்டம் போட்டு வருகிருர் ஆச்சாரியார்!

அவருடைய தீ உள்ளத்தை மாற்றும் சக்தி, ஆச்சாரியார் ஏற்றிப் போற்றும் கண்ணன் காட்டிய வழிக்கு இல்லை. ஆச்சாரியாரால் பாராட்டப்பட்டுவரும் உபநிஷதப் பலகணிக்கும் அவ்வாற்றல் இல்லை.

சென்னை அரசாங்கத்தை இழித்தும், அதே நேரத்தில் பம்பாய் அரசாங்கத்தைப் புகழ்ந்தும் பேசிவிட்டதும், ஆச்சாரியாருக்கு ஒரு நடுக்கம் ஏற்பட்டும் இருக்கிறது. மேலும் தொடர்ந்து பேசாமல் சிறு தடுமாற்றமும் அவருக்கு ஏற்பட்டு இருக்கிறது.

'இவ்வாறு கூறுவது அறிவுடைமைதானு' எனும் ஐயம் மற்றவர்களுக்கு கட்டாயம் ஏற்படுமே, அதற்கு என்ன சமாதானம் கூறுவது எனவும் சிந்திக்கிருர். இது 'சாதாரணம்—பொதுவானது' எனவும், தன் குழம்பிப்போன உள்ளத்திற்குச் சமாதானமும் கூறிக்கொள்ளுகிருர்.

அன்பர் ஆச்சாரியார் காங்கிரஸ் கட்சியில் முக்கியஸ்தர்; உயிருடன் இருக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய முதல் வரிசை காங்கிரஸ் தலைவர்களில் ஆச்சாரியாரும் ஒருவர்.

கனம் காமராசர் இரண்டாம் வரிசை — இல்லை — மூன்ரும் வரிசை காங்கிரஸ் தலைவர் பட்டியலில் இடம் பெற்றிருப்பவர்.

முதல் வரிசைத் தலைவரான ஆச்சாரியார்; மூன்ரும் வரிசைத் தலைவரான காமராசருடன் ஒப்பவைத்துத் தன்னை மதிப்பிடக் கிளம்பியது நியாயமற்றது — முறையற்றது — பொருத்தமற்றது!

அந்தப் போக்கு ஆச்சாரியாரின் மதிக் குறைவை விளக்குவதாகும்.

ஆளும் திறமை, அறிவாற்றல் தனக்கே இருக்கின்றன; காமராசர் போன்ற மூன்ரும் வரிசைத் தலைவர்களுக்கு இருக்காது எனத் தீர்மானித்துக் கொண்டிருக்கிருர் ஆச்சாரியார். அந்தத் தவருன முடிவின் காரணமாக, பதவி பறிக்கப்பட்டதால் ஒருவருக்குச் சாதாரணமாக ஏற்படும் எரிச்சலைக் காட்டிலும், காமராசர் தனது பதவியில் அமர்ந்துவிட்டது அதிகமான எரிச்சலை ஆச்சாரியாருக்குக் கொடுத்து இருக்கிறது.

அதுவுமன்றி, ஆச்சாரியார் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது தீவிரமாக எதிர்த்தவர்கள்கூட, காமராசர் ஆட்சியில் நலம் ஏற்படக் கண்டால், அவரைப் பாராட்டுவது, ஆச்சாரியாருக்குள்ள எரிச்சலை மேலும் கூடுதலாக்குகிறது.

தம்மால் எதிரியாகக் கொள்ளப்பட்டிருப்பவர் வீட்டில்திருமணம் நடந்தாலும்கூட, அங்கு சென்று ஒப்பாரிவைப்பதையே சிறந்ததெனக் கொண்டிடும் குணக்கேடு, அன்பர் ஆச்சாரியாருக்கு ஏற்பட்டுவிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதன் விளைவுதான், மாதுங்கா தமிழர்கள் பாராட்டிய நேரத்திலும், பழம்பகைமையை மறக்காது, கனம் காமராசரை இழித்துக் கூற ஆச்சாரியார் முனைந்துள்ளதாகும்.

'சாமானியர்களின் காலம் இது!'

'உயர்குடிப் பிறப்பு'ம், 'உயர்குடி அறிவு'ம் ஒழிந்துவிட்டன!

'பன்னெடு நாள் பின்தள்ளப்பட்டோருக்கு இந்நாளேனும் வசதிகள் வேண்டும்'

டாக்டர் ஏ. இராமசாமி கருத்து

"பட்டம் பெற்று, கல்லூரிகளிலிருந்து வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பெருகிக்கொண்டு வருகிறது. அவர்களைக் கொண்டு என்ன செய்வது என ஒருவருக்கும் தெரியவில்லை.

"பெருகிவரும் எண்ணிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்காக பொதுவாக ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. அதாவது, கல்வியின் பக்கம் நெருங்கிப் பழகாத அனைவருக்கும் உயர்நிலைக் கல்வி தரப்படுவதற்குப் பதிலாக, சமூகத்தின் உச்சியில் இருப்பவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு மட்டுமே ஏன் உயர்நிலைக் கல்வி அளிக்கக்கூடாது எனப் பொதுவாகக் கேட்கப்படுகிறது.

"அரசாங்க உதவியைப் பெற்று போதிக்கப்பட்டுவரும் உயர்நிலைக் கல்வி, இதுவரை கல்வி மறுக்கப்பட்டுவந்த வகுப்பினர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும். அதுவுமன்றி, வறுமையின் காரணமாகவோ, அல்லது அவர்களுடைய குடிவாழ்வைச் சூழ்ந்திருக்கும் பழக்க வழக்க சூழ்நிலையின் காரணமாகவோ சென்ற காலத்தில் கல்வியைக் குறித்துக் கருதாது கிடந்த ஆண்-பெண் இருபாலாருக்கும், உயர்நிலைக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம்.

"மேற்குறிப்பிட்டுள்ள வகுப்பினர் உயர்நிலைக் கல்வியின் நலன்களைப் பெற முன்வரும்பொழுது, அக்கல்வியை அவர்களுக்கு அளிக்க மறுப்பது 'கொடுமையிலும் பெருங் கொடுமை'யாகும் என்றே நான் உணருகிறேன். அரசியல் சட்டம்கூட, பின்தள்ளப்பட்டுக்கிடக்கும் மக்களுக்கும், பட்டியலில் இணைந்துள்ள வகுப்பினர்களுக்கும், கல்வித் துறையில் தனிச் சலுகை கொடுத்திருக்கிறது.

"வருங்காலத்தில் ஒரு பயங்கரமான புரட்சியை எதிர்நோக்காமல் நாம் இருக்க வேண்டுமானல், அவர்களுடைய பிரச்சினைகளை அணுகி, அவர்களுக்கு மறுக்கப்பட்டுவந்த கல்வி வாய்ப்புகளை, அந்த வகுப்பினர்களுக்கு இப்பொழுதாவது அளிக்க நாம் முன்வர வேண்டும்,"

—என்று டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், பட்டம் பெற்றவர்களைப் பாராட்டுவதற்காக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"மாணவர் சமுதாயம், இந்தப் பகுதியில் நடந்து கொண்டதைப் போன்று வேறெந்தப் பகுதியிலும் அத்தனை நன்னடத்தை கொண்டவர்களாக இருந்ததில்லை;

"சென்னை, மைசூர், திரு-கொச்சி ஆகிய பகுதிகளின் மாணவர் சமுதாயம்தான், இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் ஒரு முன் மாதிரியான—இலட்சிய மாணவர் சமுதாயமாக விளங்குகிறது;

"தங்களின் உள்ளத்தைத் தொட்ட பிரச்சினைகளே இல்லை என்பதினல் அல்ல—ஆனல், நிலைகுலையாத உறுதிப்பாட்டின் காரணமாகத்தான் இந்தப் பகுதி மாணவர்கள் அப்படி நடந்துகொண்டனர்; அந்த உயரிய நிலை, தொடர்ந்து நீடிக்க வேண்டுமென விரும்புகிறேன்—நம்புகிறேன்."

டாக்டர் இராமசாமி மேலும் கூறினர்:—

"'ஒரு சோஷலிச மாதிரி சமூக அமைப்பு' வேண்டுமென்று கூறப்படுகிற காலத்தில் நாம் வாழ்கிறோம்; அதில் உள்ள சிக்கல்களையும் நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும்.

"'உயர் குலப் பிறப்பு'—'உயர் குல அறிவு'—என்று, மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முன் சாதாரணமாகக் கூறப்பட்ட சொற்ருெடர்கள், இனி, மீண்டும் திரும்ப உபயோகித்துவர முடியாதபடி ஒழிந்து விட்டன; இன்று, சாதாரண மனிதன்தான்—'சரி, தவறு' என்பதை உணர்ந்துகொள்ளும் பொது அறிவு பெற்ற சாதாரண மனிதன்தான் எல்லா நாடுகளிலும் முக்கியமானவனுகக் கருதப்படுகிருன்;

"வைத்தியப் படிப்புப் பெற்ருேரின் வாழ்க்கையே—சாதாரண மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் வாழ்க்கையாகும்; அவர்களால்தான், வேறெவரைக் காட்டிலும், அந்த சாதாரண மனிதர்களின் தேவைகளை உணர்ந்துகொள்ள முடியும்.

"எனவே, நாட்டில் உள்ள மக்களின் பொதுவான உணர்வுகளை, எண்ணங்களைத் தெரிந்துகொள்வதில் இடம் பெற, மருத்துவத் தொழிலுக்கு உரிமை இருக்கிறது;

"நகர்ப்புறங்களில் மட்டுமே வைத்தியத் தொழில் கவனம் செலுத்துகிறது—என்று அடிக்கடி கூறப்படுகிறது; 'தொழில் துவங்க, குறைந்த பட்ச தேவையான வசதிகளேனும் கிடைக்குமானல், எங்கு வேண்டுமானலும் டாக்டர்கள் சென்று பணியாற்றுவர்,' என்று கூறுவோரில் நானும் ஒருவன்;

"மருத்துவக் கல்விக்கு சர்க்கார் பெரும் அளவு உதவி புரிகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்; அதாவது, சாதாரண மனிதர்கள் உதவி செய்கின்றனர் என்று கொள்ளலாம்; எனவே, அந்தக் கல்வி பெறும் ஒவ்வொருவருக்கும், ஓரளவு பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை இருக்கிறது; ஆனல் இந்த அம்சம், மிதமிஞ்சி வற்புறுத்தப்படக் கூடாது."

இந்தியாவுக்கு உருக்குப் பொருள்கள்

ஜப்பான் ஏற்றுமதி செய்ய தயாராம்

டோக்கியோ, ஆக 18—

சுமார் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் டன் உருக்குப் பொருள்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய தயாராக இருப்பதாக, நான்கு ஜப்பானிய நிறுவனங்கள் அறிவித்திருக்கின்றனவாம்.

இந்த தகவலை மிட்சு பிஷி என்ற வர்த்தக நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

அந்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர், இப்போது, இந்திய அரசாங்கத்துடன், ஒரு ஒப்பந்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிருர்.

இந்திய சர்க்கார் இதுபற்றி சீக்கிரமே பதில் தருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

விலைகளில், இந்திய—ஜப்பான் பொருள்களுக்கிடையே, கணிசமான வேறுபாடு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலனுள்ள காரியங்களுக்கு

மாவட்டக் கழக நிதி

சென்னை, ஆக. 19—

மாவட்டக் கழகங்களிடம் உள்ள இரயில்வே ஒதுக்கு நிதியினை, கல்வி நிலையங்கள் திறப்பது போன்ற பலனுள்ள காரியங்களுக்கு உபயோகிப்பதற்கு அனுமதி தரும் பிரச்சினை குறித்து கவனிப்பதாக மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிருர்

இப்போது சாலைகள் அமைக்க, பாலங்கள் கட்ட போன்ற காரியங்களுக்கு அந்த நிதியை உபயோகிக்க விதிகள் இடமளிக்கின்றனவாம்.

நங்கல் உர உற்பத்தித் தொழிற்சாலை

புதுடில்லி, ஆக. 13—

உர உற்பத்திக் குழுத் தலைவரான பி. சி. முகர்ஜி என்பார் நங்கல் உர உற்பத்தித் தொழிற்சாலையின் பொது நிர்வாகியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

நங்கல் தொழிற்சாலை வரும் 1959 முதல் உற்பத்தி துவங்கும் என்று தெரிகிறது.

இங்கு ஆண்டொன்றுக்கு 2 லட்சம் டன் அமோனியம் நைட்ரேட் உரம் உற்பத்தியாகுமாம்.

'வேலை தருவதற்கு ஆலைகள் துவங்க வேண்டும்'

'அவற்றை நிறுவ நமக்கு அதிகாரம் வேண்டும்'

பொட்டனேரி கூட்டத்தில் காஞ்சி-கல்யாணசுந்தரம்

15—8—55 மாலை 6-30-க்கு, சேலம் மாவட்டம் பொட்டனேரி தி. மு. கழகச் சார்பில் தோழர் இரா. செகநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில் கூறியதாவது:—

"ஏறக்குறைய இந்த நாடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலையடைந்து எட்டு ஆண்டுகள் ஆகியும், அந்த சுதந்திரத்தை இந்த நாட்டு மக்களாகிய நாம்—குறிப்பாக விவசாயிகளாகிய நீங்கள்—அனுபவிக்க முடியவில்லை; சுதந்திரத்திற்கு முன்னால் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளானீர்களோ அதைவிட பன்மடங்கு இப்பொழுது தொல்லைப்படுகிறீர்கள்; சுதந்திரம் வந்தும்கூட சுகம் பெற முடியவில்லை, என்றால், அதற்கான காரணம் என்ன என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை சிந்திக்கச் சொல்கிறது."

அடுத்து, தோழர் சி.வரதராசன் பேசுகையில், தென்னாடு பிரிக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்தும், அதற்கான பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோரியும் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், தோழர் அ. வெங்கிடாசலம் பேசுகையில், வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிக்க மக்கள் அனைவரும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து, தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் பேசியதாவது:—

"சமுதாயத்தில் நல்ல மாறுதலையும், அதே மாதிரி பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றிலும் நல்ல மாறுதலையும் செய்ய தி. மு கழகம் பாடுபடும்.

"யார் அரசு நடத்தினாலும், வடநாட்டுத் தொடர்பு நமக்குக் கூடாது; தென்னாடு தனி நாடாக தன்னைத்தானே ஆளவேண்டும் என்றுதான் தி. மு கழகம் விரும்புகிறது. இன்றையவரை நேரு சர்க்கார் போட்ட திட்டம் நம் நாட்டிற்கு எதுவும் பயன்பெற முடியவில்லை. வடநாட்டில் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து, தென்னாட்டை அடிமை நாடாக—வளமற்ற நாடாகச் செய்கிறது. இந்நிலை மாறவே, தென்னாடு தனி நாடாக ஆகவேண்டும்."

இறுதியில் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் பேசியதாவது:—

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று தீட்டி மிகவும் விளம்பரப்படுத்தினார்கள்; சுமார் ரூ. 2,000 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டது; சென்னை சர்க்காருக்கு ரூ. 90 கோடிதான் கிடைத்தது; திட்டம் செயல் முறையில் வரும்பொழுது நமக்கு, அது வேதனையைத்தான் தந்தது. இப்பொழுது நமது மாநிலத்தை ஆளுகிற திரு காமராசரிடம் நாம் சண்டை போட்டால் எந்தவித பலனும் கிடைக்காது; காரணம், அவர் டெல்லி சர்க்கார் சொல்கிறபடிதான் நடக்கவேண்டும்; காமராசருக்கு சுதந்தரமாகச் செய்ய எந்தவித அதிகாரமும் இல்லை;

"'தற்சமயம் இலங்கையிலே இருந்து வெளியேறும் தமிழர்களுக்கு எங்கே பாதுகாப்புத் தருகிறீர்கள்'—என்று கேட்டால் 'வருகிறவர்கள், அவர்களே வேலை தேடிக் கொள்வார்கள்' என்று ஒரு பொறுப்புள்ள மந்திரி சொல்கிறார்; வட நாட்டில் பாகிஸ்தான், கல்கத்தா ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்கு மட்டும் நமது காமராசர் சர்க்கார் எல்லாவித வசதிகளும் செய்து தருகிறது—வடநாட்டு ஆட்சி உத்திரவின்படி! ஆனால், நமது பரம்பரையினரோ பிச்சை எடுக்கிறார்கள். இந்த சூழ்நிலை மாறவேண்டாமா? இதை இன்றைய காங்கிரசார்கள் உணர வேண்டும்.

"இந்த பொட்டனேரியிலிருந்து, மேட்டூர் 5 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கே உண்டாகும் மின்சாரத்தை இங்கே கொண்டுவர முடியவில்லை. எங்கெங்கோ போகும் மின்சாரம், இங்கே மட்டும் கொண்டுவரப்படாததின் காரணம் என்ன? இதற்கும் மத்திய சர்க்கார் உத்தரவு தேவையாக இருக்கிறது! இங்கிருக்கும் நிலங்கள் காய்ந்து, வரண்டு கிடக்க வேண்டியிருக்கிறது. இந்த ஊரில் 10 விவசாயி இருந்து, மேட்டூரிலே மில் ஆரம்பிக்காமல் இருந்த பொழுது, இந்த 10 பேரும், விவசாயத்தை நம்பி அதில் ஈடுபட்டு, சுகமாக, நாகரீகமாக வாழ முடியவில்லை; மேட்டூரிலே மில் ஏற்பட்ட பிறகு, இந்த ஊரிலிருந்து 10-க்கு 4 பேர் மேட்டூர் சென்று மில் வேலையில் ஈடுபடுகிறார்கள்; முன்பு 10-க்கு 10 பேர் விவசாயத்தில் ஈடுபட்டு கஷ்டப்பட்டவர்கள், இப்பொழுது 10-க்கு 6 பேர் விவசாயத்தில் ஈடுபடும் நிலைமை ஏற்பட்டது மில்லில் உள்ள 4 பேரும் இப்பொழுது சுகமாக இருக்கிறார்கள். இதனால் எல்லோருக்கும் வேலை கிடைக்கிறது; இதைத்தான் நாங்கள் சொல்லுகிறோம்;—தென்னாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டவர்களைக் குறைத்து, அவர்கள் மற்ற தொழில்களில் சேருவதற்கு வசதியை உண்டாக்குமாறு சர்க்காரைக் கேட்டால், இம்மாநில ஆட்சியினர் டில்லியைக் காட்டுகிறார்கள்; எனவேதான், இந்த வடநாட்டு ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்று, நாங்கள் பிரச்சாரம் செய்கிறோம்

"ஒவ்வொரு துறையிலும் தென்னாட்டவராகிய நாம் பின்தள்ளப்பட்டுக் கிடக்கிறோம்; அந்த நிலையை மாற்றி நாம் முன்னேற்றம் காண வேண்டுமானால், வடநாட்டு ஆதிக்கத்தை ஒழித்து, தென்னாடு தனியாக விடுதலை பெற நாம் பாடுபட வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க முன்வர வேண்டும்."

சிங்கப்பூருக்கு சுயாட்சி

கோரிக்கைக்கு பிரிட்டன் ஆதரவு

சிங்கப்பூருக்கு சுயாட்சி கிடைப்பதற்கான சூழ்நிலைகள் உருவாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இப்போதுள்ள அரசியல் சட்டம் ஓராண்டு காலம் அமுல் செய்யப்பட்டு, அதில் கிடைக்கும் அனுபவங்களைக்கொண்டு, மேலால், சிங்கப்பூர் சுயாட்சி பெறுவது பற்றி, சிங்கப்பூர் சட்டமன்ற தூதுவர்களுடன் இங்கிலாந்து அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக கவர்னர் சர். ராபர்ட் பிளாக், சட்ட சபைக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

முதன் மந்திரியான டேவிட் மார்ஷல், "கவர்னரின் கடிதம், 'புதிய சகாப்தம்' தோன்றுவதைக் குறிக்கிறது; சிங்கப்பூர் சுயாட்சி பெறும் முயற்சியில் வெகுவான முன்னேற்றத்தைக் காட்டுகிறது," என்று கூறி வரவேற்றிருக்கிறார்.

'உடனடியாக சுயாட்சிவேண்டும்,' என்று, கடந்த ஜூலை 25-ந் தேதியன்று சட்டசபை தீர்மானித்திருப்பது குறித்து, இன்னும் ஒன்பது திங்களுக்குள் லண்டனில் நடைபெறும் வட்ட மேஜை மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

அந்த மாநாட்டில், எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம் பெறுவர் என்றும், சிங்கப்பூருக்கு முழு சுயாட்சி கிடைப்பதற்கான நாள் நிர்ணயிக்கப்படும் என்றும் மார்ஷல் தெரிவித்திருக்கிறார்.

மதுரை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

22—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை அமெரிக்கன் கல்லூரி; இரவு 10 மணிக்கு: மதுரை: 'மணி மகுடம்' நாடகத் தலைமை.

23—8—55: மாலை 4 மணிக்கு: தேவதானப்பட்டி; மாலை 5 மணிக்கு: பெரியகுளம்; மாலை 7 மணிக்கு: ஆண்டிபட்டி இரவு 10 மணிக்கு: 'மணி மகுடம்' நாடகத் தலைமை.

24—8—55: மாலை 4 மணிக்கு: கம்பம் பொதுக்கூட்டம்; மாலை 6 மணிக்கு: போடிநாயக்கனூர்.

25—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை, தியாகராசர் கல்லூரி; மாலை 7 மணிக்கு: சோழவந்தான் பொதுக்கூட்டம்.

மிளகாய் ஏற்றுமதி

புதுடில்லி, ஆக. 19—

மிளகாய் பற்றிய ஏற்றுமதிக் கொள்கையை இந்திய சர்க்கார் பரிசீலித்து, சென்னை, மைசூர், மற்றும் சில மாநிலங்களிலிருந்து, ஏற்றுமதிக்கு 'கோட்டா'க்களை விடுவிக்கத் தீர்மானித்துள்ளதாம்.

கடையநல்லூரில் அண்ணா

மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 150

கடையநல்லூர் நகர தி. மு. கழகச் சார்பில் 17—8—55 இரவு 8 மணியளவில், மறுமலர்ச்சி திடலில் நெல்லை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், சிறிது நேரம் பேசிய பின் அண்ணா அவர்கள் மக்களின் ஆரவாரத்திற்கிடையே நீண்ட நேரம் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

அண்ணா அவர்களுக்கு பல மன்றங்களின் சார்பாக வரவேற்பு இதழ்களும், மலர்மாலைகளும் வழங்கப்பட்டன.

கடையநல்லூர் நகர தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 150 வழங்கப்பட்டது.

சாலையோரக் 'காதல்'

25,000 பேர் கைது!

கல்கத்தா, ஆக. 19—

கடந்த ஜூலை 31-ந் தேதியுடன் முடிவடைந்த ஓராண்டுக் காலத்தில், சாலை ஓரத்தில் காதல் புரிய முயன்றவர்களும், மற்றும் ஒழுங்கீனமாக நடந்துகொண்டவர்களுமாக மொத்தம் 25,000 பேர்கள் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டனர் என்று மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் தெரிவித்திருக்கிறார்.

அவர்கள், பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவிகளை தொந்தரவு செய்ததாகவும், வழியில் செல்லும் பெண்களைப் பற்றி ஆபாசமாகவும் பேசியதுடன், ஒழுங்கீனமாகவும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயன்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டதாக டாக்டர் ராய் தெரிவித்தார்.

தியாகிகளுக்கு உதவி!

புதுடில்லி, ஆக. 18—

"விடுதலைப் போரில் பங்கு கொண்டு தியாகம் புரிந்தவர்களுக்கு உதவி செய்வது மாநில சர்க்கார்களின் பொறுப்பு; மாநில சர்க்கார்கள், இந்தப் பிரச்சினையை, கூடுமானவரை திருப்திகரமாக தீர்த்து வருகின்றன [illegible]ந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், விடுதலைப் போரில் கஷ்டப்பட்டிருந்தால் அவர்கள் தியாகிகள் எனக் கருதப்படுவர்"

என்று, மக்கள் சபையில் உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

கழகச் செய்திகள்

பொட்டனேரியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

15—8—55 மாலை 6 மணிக்கு தோழர் இரா. செகந்நாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் அ. வெங்கடாசலம், சி. வரதராசன், சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் தி. மு கழக கொள்கையைப் பற்றி பேசிய பின்னர், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனார் அவர்கள் 'தி. மு. கழகக் குறிக்கோள் என்ன?' என்பது பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

குளித்தலை தி. மு. கழகம்

15—8—55 இரவு 9 மணிக்கு, குளித்தலை மஜீத் பாண்டியன் மன்றத்தில், தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வரவு—செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், குளித்தலையில் நடைபெற இருக்கும், திருச்சி மாவட்டச் செயற்குழு கூட்டத்தைச் சிறப்பாக நடத்திக் கொடுப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

"தென்னாற்காடு மாவட்டத்தில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், இத்திங்கள் 28, 29, 30, 31-ந் தேதிகளில் சுற்றுப் பயணம் செய்வார்கள்;

"மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்களில் இன்னும் மாநில மாநாட்டிற்கான பங்குத் தொகையை அனுப்பாதிருப்பவை, உடனடியாக அனுப்பித் தர வேண்டுகிறேன்;

"அண்ணா அவர்களின் விரிவான சுற்றுப்பயணத் திட்டம் அடுத்து வெளியிடப்படும்."

ஃ ஃ ஃ

"28-8—55 ஞாயிறன்று பகல் 2 மணி அளவில், மாவட்டக் கழக அலுவலகத்தில், அண்ணா அவர்கள் முன்னிலையில், மாவட்டக் கழகக் கூட்டம் நடைபெறும். பிரதிநிதிகள் யாவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன்"

என்று தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

மந்திரியாகப் போகிறாராம்!

நாகர்கோவில், ஆக. 18—

திரு—தமிழக காங்கிரஸ் தலைவர் ஏ. நேசமணி, திரு—கொச்சி சட்டசபையின் அடுத்த கூட்டத்திற்குள் மாநில மந்திரியாகிவிடக் கூடும் என்று தெரிய வருகிறது.

தனது, மக்கள் சபை உறுப்பினர் பதவியை விட்டு விலகிவிடுவார் என்றும், சட்டசபை உறுப்பினர் ஒருவர் காலி செய்யும் இடத்தில் தேர்தலுக்கு நிற்பார் என்றும் தெரிய வருகிறது.

இவர் விலகும் மக்கள் சபை உறுப்பினர் பதவிக்கு, இவருக்கு சட்டசபைத் தொகுதி இடம் தரும் நபர் போட்டியிடுவார் என்றும் கூறப்படுகிறது.

வாண்டையாங்குப்பத்தில் தி. மு. கழகம் திறப்பு

15—8—55-ல் சிதம்பரம் வட்டம், வாண்டையாங்குப்பம் தோழர் பொன். சொக்கலிங்கம் தலைமையில், தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெற்று, கழக அமைப்பும், தேர்தலும் நடைபெற்றது. தோழர் மு. சுப்பிரமணியனைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சேலம் நகர தி. மு. கழகம்

14—8—55 காலை 10 மணிக்கு தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நகர கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், 17—7—55ல் நடைபெற்ற 'மணி மகுடம்' நாடக வரவு-செலவு கணக்குகளை அங்கீகரித்தும், மாவட்டக் கழகத்தார் நகரக் கிளைக்கு அளித்த மாநாட்டுப் பங்குத் தொகைக்கு மாவட்டக் கழகத்தாருக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாண்டுப் (பம்பாய்) தி. மு. கழகம்

11—8—55 காலை 9-30 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் கிரந்த சொற் பயிற்சிக் குழு அமைக்கப்பட்டு, தோழர் மா. ஈசாக், டேவிட், முத்துசாமி, தாசன், சாமுவேல், கா. க. சேதுராமன் ஆகியோர்கள் குழு உறுப்பினர்களாகவும் தோழர் கா. க. சேதுராமன் பொறுப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் 'சமது அண்ணா' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

நல்லூர் தி. மு. கழகம்

தஞ்சை மாவட்டம் சீர்காழி வட்டத்தைச் சேர்ந்த நல்லூர் தி. மு. கழகக் கிளையின் நிர்வாகக் குழு தேர்தல், தோழர் வி. எம். எம். குசை தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. என். கோதண்டபாணியைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

குமரன்சாவடி தி. மு. க.

14—8—55 இரவு 8 மணியளவில், டி. துரைசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கிளைக் கழகத்திற்கு, கழக ஏடுகள் வாங்குவதென முடிவு செய்யப்பட்டது.

வண்டிப்பெரியார் தி. மு. கழகம்

10—8—55 மாலை 4 மணிக்கு வண்டிப்பெரியார் தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. ஏ. நிலையழகன் தலைமையில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் கமிட்டிக் கூட்டத்தில் பீர்மேடு தாலுகா தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், தி மு. கழக மாநில மாநாட்டிற்குத் தங்கள் பங்காக ரூ 222-கொடுப்பதென முடிவு செய்து, அதன்படி மாநாட்டு நிதியை அண்ணா அவர்களிடம் கொடுப்பதற்காக, அண்ணா அவர்களை அழைத்துப்பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், அப்பொதுக் கூட்டம் நடைபெறுவதற்காக ஆவன செய்ய பொதுச்செயலாளரைகேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆரம்பக் கல்விக் குழுவின் அறிக்கை

'அக்டோபர் இரண்டாவது வாரத்தில், ஆரம்பக் கல்விக் குழுவின் அறிக்கை சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்படும்,' என்று குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

'விடுதலை போராட்ட'த்தில் 800 பேர் பலி?

பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து மொராக்கோ, அல்ஜீரியாவில் 'கலகம்'

பாரிஸ், ஆக. 21—

முகம்மது பென் யூசுப் என்ற சுல்தானை வெளியேற்றிய இரண்டாம் ஆண்டு நினைவு நாள் விழாவினை ஒட்டி, மொராக்கோவிலும், அல்ஜீரியாவிலும், பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து பலத்த மோதுதல்கள் ஏற்பட்டதின் விளைவாக 800 பேர்களுக்கு மேல் பலியாகியிருக்கின்றனர்; பலர் காயமடைந்துள்ளனர்.

"மொராக்கோவிலும், அல்ஜீரியாவிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது பிரெஞ்சுத் துருப்புக்களுடன் கிளர்ச்சிக்காரர்கள் மோதிக்கொண்டதினால் இந்தப் பயங்கரப் படுகொலை நடைபெற்றது," என்று, பிரெஞ்சு சர்க்கார் கூறுகின்றனர்.

பலியானவர்களில் பலர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

பலியானவர்களில், மொராக்கர்களுடன் சேர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட ஐரோப்பியர்களும் இடம் பெற்றிருக்கின்றனராம்.

மொராக்கோ சுல்தான் முகம்மது பென் யூசுப் நாடுகடத்தப்பட்டு இரண்டாண்டு முடிவதை யொட்டி பலாத்காரச் செயல்கள் கிளம்பினவாம்.

பிரெஞ்சு மொராக்கோவை அடுத்துள்ள ஸ்பானிஷ் மொராக்கோவிலும், முகம்மது பென்யூசுபை ஆதரித்து ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

தேதுவான் என்ற அந்தக் காலனியின் தலைநகரில் சுமார் 30,000-த்திற்கும் அதிகமான மக்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

மொராக்கோவில் பிரான்சு கடைப்பிடித்துவரும் 'மிருகத்தனமான காலனிக் கொள்கையை அவர்கள் எதிர்ப்பதாக முழக்கியிருக்கின்றனர்.

நடைபெற்ற சம்பவங்கள் குறித்து பிரெஞ்சுப் பிரதமர் பாவ்ரே, அறிக்கை ஒன்றுவெளியிட்டிருக்கிறார்.

அல்ஜீரியாவிலும், மொராக்கோவிலும் நடைபெற்ற சம்பவங்களுக்குக் காரணமாயிருந்த குற்றவாளிகளைத் தண்டிக்கப்போவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியப் பிரதமர்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஜனவரித் திங்களுக்குள் பைசல் செய்வது இலங்கை சர்க்காருக்கு சாத்தியமா என்பது சந்தேகமாகவே இருக்கிறதாம்.

"இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டே இலங்கை சர்க்கார், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மதித்து நடக்கவில்லை என்று கூற முடியும்" என்று, இந்திய சர்க்கார் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்!

"குடிஉரிமை மனுக்களை இவ்வளவு சாவதானமாகப் பைசல் செய்துவருவதே ஒப்பந்தத்தை மீறுவதாகும்; மேலும், பல்லாண்டு காலமாக இலங்கையில் வாழ்ந்து வரும் பல்லாயிரவருக்குக் குடி உரிமை வழங்க மறுத்திருப்பது, ஒப்பந்தங்களை முழுவதுமாக இலங்கை சர்க்கார் மறுத்து மீறி நடந்திருப்பதாகக் கொள்ள முடியும்," என்று, இந்திய சர்க்கார் வட்டாரங்கள் கூறுகின்றன.

'இந்த ரீதியில், இலங்கை செல்லுமானால், இரண்டு இலட்சம் பேர்களுக்குக்கூட குடி உரிமை கிடைப்பது துர்லபமாயிருக்கக்கூடும்' எனவும் அஞ்சப்படுகிறதாம்!

முன்னாள் இலங்கைப் பிரதமராயிருந்த டட்லி சேனநாயகா, இரண்டாண்டுகளுக்கு முன், நான்கு இலட்சம் பேர்களுக்கு இலங்கைக் குடிஉரிமையும், மேலும் இரண்டரை இலட்சம் பேர்களுக்கு நிரந்தர குடியிருப்பு அனுமதியும் தருவ

தாகக் கூறியிருந்தார் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது

★

இந்தியர்களாகப் பதிவு பெற்ற நாடற்றவர்கள்

கொழும்பு, ஆக. 19—

'நாடற்றவர்கள்' என்று வர்ணிக்கப்படுவோர்களில், கடந்த ஜூலையில் மட்டும் 515 பேர்களை, இந்தியக் குடிமக்களாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவராலயம் பதிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜூலை முடிவில் 1,466 மனுக்கள் பைசல் செய்யப்படாமல், இந்தியத் தூதுவராலுவலகத்தில் இருக்கிறதாம்.

ஜனவரி முதல் ஜூலை வரை 3,579 பேர்களை இந்தியக் குடிமக்களாக இந்தியத் தூதுவர் ஏற்றுக் கொண்டிருக்கிறாராம்.

கோவில்பட்டியில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரே அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாலை சிற்றுண்டிக்குப் பின்னர், மெயின் ரோடிலுள்ள சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் தி. மு. கழகக் கொடியை அண்ணா அவர்கள் ஏற்றி வைத்ததும் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்த தோழர்கள், கை ஒலி கிளப்பி, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய ஒலியை முழக்கினர்.

மாலை 6-30 மணியளவில், அழகிரி சதுக்கத்தில், நகர தி. மு கழகப் பொருளாளர் தோழர் அ. சு. சி. பொன்னுசாமி தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று.

அண்ணாவுக்கும், ஏனையோருக்கும், நகர தி. மு.கழகம், சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகம், எட்டயபுரம் தி. மு கழகம், கடம்பூர் தி. மு. கழகம், துறையூர் தி. மு. கழகம், எவரெஸ்ட் தீப்பெட்டித் தொழிலாளர்கள், லாயல் மில் தொழிலாளர்கள், லட்சுமி மில் தொழிலாளர்கள், சாக்குத் தையல் தொழிலாளர்கள், இலுப்பையூரணி தி. மு. கழகம் ஆகியவற்றின் சார்பிலும், தனிப்பட்ட தோழர்கள் ராம்சிங், கந்தசாமி, பாலையா ஆகியோர் சார்பிலும் கைத்தறித் துண்டுகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன

தோழர் பாலையா மாநில மாநாடு நிதிக்காக 101 காலணாக்களை அண்ணாவிடம் அளித்தார்.

பின்னர், தோழர்கள் கே. வி. கே. சாமி, அ பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர்.

பின்னர், அண்ணா அவர்கள் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்திய பின்னர் கூட்டம் 9 மணியளவில் முடிவுற்றது.

கோவில்பட்டி சரித்திரமே கண்டிராத அளவில், பொதுக்கூட்ட மேடைப் பரப்பளவு முழுவதும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது இதுவரை எந்தப் பொதுக்கூட்டத்திலும் இல்லாத அளவில் ஆயிரக் கணக்கில் மக்கள் பொதுக்கூட்டத்திற்குத் திரண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கையால் தயாரிக்கப்படும் காகித நிறுவனம்

கீழ்பவானியில் நிறுவுவதற்கு சர்க்கார் உத்தேசம்

"கையினால் காகிதம் உற்பத்தி செய்வதற்கு, சென்னை மாநிலத்தில் மூன்று தனிப்பட்ட நிறுவனங்களிருக்கின்றன; இவற்றிற்கு சர்க்கார் பண உதவி செய்கிறது; அந்தக் காகிதத்தை சர்க்காரும் உபயோகிக்கிறது; நல்ல காகிதமும் அந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது," என்று, சென்னை சட்ட சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

75,000 டன் உற்பத்தி செய்யக் கூடிய சக்திவாய்ந்த மற்றொரு நிறுவனத்தை கீழ்பவானி திட்டப் பகுதியில் நிறுவுவதற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டது.

வட்டங்கள், கிராமங்கள் திருத்தியமைப்பு

திரு-கொச்சி சர்க்கார் பரிசீலனை

திருவனந்தபுரம், ஆக. 21—

மாநிலத்தில் உள்ள வட்டங்களை (தாலுகாக்கள்) திருத்தி அமைக்கவும், கிராமங்களை அவற்றில் இணைக்கவுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கென திரு-கொச்சி சர்க்கார் ஒரு குழு நியமித்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

மக்கள் தொகை, நிர்வாக வசதி, ஒரே சீரான நலன்கள் முதலியவைகளைப் பொறுத்து திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாம்.

திருவாங்கூரும், கொச்சியும் இணைக்கப்பட்டிருப்பதை யொட்டி, கிராமங்களைத் திருத்தியமைப்பது பற்றியும் குழு பரிசீலனை செய்யுமாம்.

அந்நிய நிறுவனங்களில் இந்திய அலுவலர்கள்

அமைச்சர் தரும் எண்ணிக்கை

புதுடில்லி, ஆக. 21—

இந்தியாவெங்கணுமுள்ள அன்னிய நிறுவனங்களில் அலுவல் பார்ப்பவர்களை, இந்தியர் மயமாக்கும் வேலை முன்னேறியிருப்பதாக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

"கடந்த 1954 ஜனவரி முதல் தேதியன்று, அத்தகு நிறுவனங்களில் இருந்த இந்தியர்களின் எண்ணிக்கை 18,642; இப்போது 1955 ஜனவரி முதல் தேதியன்று 21,904 ஆக உயர்ந்துள்ளது," என்று, மந்திரி கனுங்கோ தகவல் தந்திருக்கிறார்.

"அதே காலத்தில், வேலையில் உள்ள வெளிநாட்டாரின் எண்ணிக்கை 7,750 ஆக இருந்தது—7,587 ஆகக் குறைந்துள்ளது," என்ற தகவலையும் அவர் தந்தார்

'கர்நாடகத்துடன் கோவா இணைய வேண்டும்'

கர்நாடக காங்கிரஸ் தலைவர் அறிவிப்பு

பெங்களூர், ஆக. 21—

"அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கர்நாடக மாநிலத்தில் கோவா இணைக்கப்பட வேண்டும்,"

என்று, மாநில புனரமைப்புக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக, கர்நாடகப் பகுதி காங்கிரஸ் தலைவரான எஸ். நிஜலிங்கப்பா தகவல் தந்திருக்கிறாராம்.

"ஆனால், நாங்கள் இதை ஒரு கோரிக்கையாகக் கேட்கவில்லை; கோவா முதலில் சுதந்திரமடைய வேண்டுமென்பதே எங்களின் முதற் கவலை"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

"பாரம்பரியம், பண்பாடு, சரித்திரம், பூகோளம் ஆகிய கண்ணோட்டங்களின்படி கோவா கர்நாடகத்துடன்தான்' இருக்க வேண்டும்; ஆனால், நாம் இதற்கென இப்போது கிளர்ச்சி செய்யப் போவதில்லை; கோவா விடுதலைதான் முதல் பிரச்சினை; விடுதலை பெற்ற பின், கோவாவில் உள்ள $6\frac{1}{2}$ லட்சம் மக்களும் இதுபற்றி தாங்களே முடிவு செய்யட்டும்,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

புதுடில்லியிலிருந்து கல்கத்தாவுக்குமாற்றம்

கல்கத்தா, ஆக. 19—

இந்துஸ்தான் உருக்குத் தொழிற்சாலையின் தலைமை அலுவலகம், புதுடில்லியிலிருந்து கல்கத்தாவிற்கு ஆக. 22-ந் தேதி முதல் மாற்றப்படும் என்று தெரிகிறது.

ரூ. 9 லட்சம் பெறுமான இயந்திர சேதம்

மதுரை மின்சார நிலையத்தில் ஏற்பட்ட விபத்து

"1955 ஜூலை 24-ந் தேதி மதுரை எரி மின்சார நிலையத்தில், மின்சார உற்பத்தி இயந்திரம் ஒன்று (டர்பைன்) சேதமடைந்தது உண்மைதான்; அதன் விலை ரூ. 9,23,000 ஆகும்; இதைப் பழுதுபார்த்து செம்மைப்படுத்த ரூ. 10,000 ஆகும்," என்று சென்னை சட்ட சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் ஏற்பட்ட விபரீதம்

141 பேர் பலியாயினர்

அமெரிக்காவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள பயங்கரமான வெள்ளத்தால் 141 பேர் உயிர் துறந்திருப்பதாகத் தெரிகிறது. கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள சொத்துக்களுக்கு நஷ்டமேற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாலங்களும், அணைகளும் உடைந்து வெள்ளத்தில் மூழ்கினவாம்; கட்டிடங்கள் இடிந்து விழுந்தனவாம்; வீதிகள் யாவும் நதிகள் போன்று தோற்றமளிக்கின்றனவாம்

கம்பெனி மசோதா

புதுடில்லி, ஆக. 19—

'கம்பெனிகள் மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்,' என்ற சர்க்காரின் பிரரேபனை மக்கள் சபையில் நிறைவேறியது.

இதனால், கூட்டுப் பரிசீலனைக் குழுவின் சிபாரிசுகளை சபை பொதுப்படையாக அங்கீகரித்தது.

அடுத்து, மசோதா, விதிவாரியாக விவாதிக்கப்படும்.

குடியிருப்பு வசதித் திட்டங்கள்

புதுடில்லி, ஆக. 19—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த குடியிருப்பு வசதிகளுக்கான திட்ட அமுலை பரிசீலனை செய்யவும், இரண்டாவது திட்டத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யவும், திட்டக் குழு, ஒரு தனிக் குழுவை நியமித்துள்ளது.

வரவேற்கத்தகுந்தது!

பம்பாய், ஆக. 19—

1908-ம் ஆண்டு பம்பாய் உயர் நீதி மன்றத்தில் லோகமான்ய திலகருக்கு 6 ஆண்டுகள் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்ட இடத்திலேயே, தற்போது ஒரு சலவைக் கல்லை நிறுவி, அவர், நீதிமன்றத்தில் இறுதியாக செய்த பிரசங்கத்தின் கடைசி வாக்கியத்தை அதில் பொறிக்கவும் பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனராம்.

காஞ்சி நகரசபை தேர்தல்

காஞ்சிபுரம் நகரசபை தேர்தலுக்கான அபேட்சைப் பத்திரங்கள் இம்மாதம் 24, 25, 26-ந் தேதிகளில் பெற்றுக்கொள்ளப்படும்; 27-ந் தேதி மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். இறுதி அபேட்சகர்கள் பட்டியல்—அப்பீல் இல்லாவிட்டால் 31—8—55 அன்றும், அப்பீல் இருந்தால் 4—9—55-லும் பிரசுரிக்கப்படும்; 10—10—55ல் தேர்தல் நடைபெறும்; 11—10—55-ல் வாக்குகள் எண்ணப்படும்.

தொழிலாளர் கோரிக்கைக்காக எம். எல். ஏ., பட்டினிப் போர்!

இராபர்ட்சன்பேட்டை, ஆக 18—

"கடந்த 1952-ம் ஆண்டுக்கான போனஸ் தரப்பட வேண்டும்; வேலை நீக்க 'கிராஜுவட்டி' தர வேண்டும்; சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்; என்பன போன்ற கோரிக்கைகளை, உடனடியாக நிறைவேற்ற வேண்டும்,"

என வற்புறுத்துவதற்காக, சாம்பியன் ரீப் சுரங்கத் தொழிலாளர் சங்கச் செயலாளரும், மைசூர் சட்ட சபை உறுப்பினருமான கே எஸ். வாசன் கடந்த மாலையிலிருந்து பட்டினிப் போர் தொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தத் தகராறு, கடந்த மூன்றாண்டுகளாக தீர்வு காணப்படாமலேயே இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்திய சர்க்கார் நியமித்த தன்பாத் தொழில் 'டிரிபியூனல்', கடந்த ஜனவரியில் தந்த தீர்ப்புக்கு எதிராக நிர்வாகிகளும், தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழில் நீதிமன்றத்தில் அப்பீல் செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் சுமார் 15,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததின் விளைவாக, நீதி மன்றத்திற்கு வெளியே பேச்சு வார்த்தைகள் நடத்த, நிர்வாகிகள் சம்மதித்தனர்.

பேச்சு வார்த்தைகள் முடிவுக்கு வரும் தருவாயில், கடந்த ஜூன் திங்களில், நிர்வாகிகள் பேச்சு வார்த்தைகளை திடீரென நிறுத்தி விட்டனர். மைசூர் சர்க்கார், சுரங்கங்களை தேசிய மயமாக்கப் போவதாகத் தீர்மானித்ததே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

தொழில்கள் தேசீய மயமாவதை தொழிற் சங்கங்கள் வரவேற்கின்றன; ஆனால், சர்க்காரின் முடிவு, தகராறுகளுக்குப் பரிகாரம் தேடுவதில் குறுக்கே நிற்பதால், அதனை ஏற்றுக் கொள்வதற்கில்லை,"

என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

24—8—55 மாலை $7\frac{1}{2}$ மணிக்கு, எண் 19-ஏ, வேலாயுதபாண்டியன் தெரு (மாடியில்), சென்னை 3-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் மு இராமையா தலைமையில், 'நாம்' எனும் பொருள் பற்றி உறுப்பினர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.